வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

கும்மிடிப்பூண்டி

வழக்கு எண் :CC 197 / 2022 காவல் நிலையம் : DCB திருவள்ளூர் காவல் நிலையம்

வழக்கு சாட்சி : PW 1

நாள் :29.01.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகம் | ஜாதி | : | |
| தந்தை /கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(எதிரி ஆஜர் இல்லை)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். என் மகன் பி.இ., பட்டபடிப்பு படித்துள்ளார். என் மகனுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணி வாங்கி தருவதாக சொன்னார்கள். என்ன வேலை வாங்கி தருவதாக சொன்னார்கள் என்றால் AE வேலை. அரசு துறையில் வேலைக்கு ஆட்கள் எடுக்க வேண்டும் என்றால் TNPSC மூலமாக தான் எடுப்பார்கள் என்றால் சரிதான். எழுத்து தேர்வு மற்றும் நேர்முக தேர்வு மூலமாக தான் வேலை கொடுப்பார்கள் என்றால் சரிதான். என் மகன் TNPSC யில் விண்ணப்பித்ததற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் அரசு ஊழியர் என்ற அடிப்படையில் ஒரு செயல் செய்வதற்காக கையூட்டல் கொடுப்பது குற்றம் என்றால் அது பற்றி எனக்கு தெரியும். செய்ய வேண்டிய செயலை செய்யாமல் முறையற்ற முறையில் செய்ய தூண்டுவதும் சட்டபடி குற்றம் என்றால் சரிதான். மலையனூர் ரமேஷ் என்று யாரையும் எனக்கு தெரியாது. என் மகனுக்கு வேலை வாங்கி தரவில்லை என்று புதுகோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை தாசில்தார் தான் ரமேஷ்க்கு எதிராக புகார் கொடுத்தார். யாருக்காவது கடன் கொடுத்தால் அதை எழுதி வைக்கும் பழக்கம் எனக்கு இல்லை. சின்ன கருப்பன் என்பவரிடம் பணம் கொடுத்ததாக சொல்லபடும் நிலையில் அதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.
சின்ன கருப்பன் என்பவர் கண் ஊனமுற்ற நபர் என்றும் அவர் என் வீட்டிற்கு வந்து பணம் பெற்றுகொண்டார் என்பது பொய் என்றால் சரியல்ல. சின்ன கருப்பன் என்பவர் வருவாய் துறையில் பணிபுரிபவர் என்றும் மின்சார வாரியத்தில் வேலை வாங்கி தருவதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. சின்ன கருப்பனின் தம்பி தான் மின்சார வாரியத்தில் பணிபுரிகிறார். 2015ம் வருடம் புகார் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். எந்த தேதி என்று தற்போது ஞாபகமில்லை. நான் 3 தவணையில் பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் 15 இலட்சம் ரூபாய் கொடுத்திருந்தால் அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் நான் ஓய்வுபெற்ற பணம் மற்றும் ஒரு இடத்தை விற்று விட்டு வந்த பணத்தை கொடுத்தேன். இவ்வழக்கில் புகாரை தவிர

வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சின்ன கருப்பன் என்பவர் எந்த காலத்திலும் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் நான் சொல்வது போல் எந்த வேலையும் செய்யவில்லை என்றும் யாரோ ஒரு நபரிடம் பணம் கொடுத்து ஏமாந்து விட்டேன் என்றால் சின்ன கருப்பன் என்பவர் என் வீட்டிற்கு வந்து வாங்கி சென்றார். அரசு பணி பெற்று தருவதற்காக சென்னை வர சொன்னார் என்று நான் கூறுவது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சின்னகருப்பன் என்பவரை மதுரை சென்று பார்த்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நானும் கேசவனும் மதுரை சென்று பார்த்தோம். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் அவரிடம் பணம் பறிக்க வேண்டி பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரிலும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டது போல் எதிரியிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த கால கட்டத்திலும் என்னிடம் வேலை வாங்கி தருவதாக கூறவில்லை என்றால் சரியல்ல. பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.K.P. Dilip Babu, M.A., M.L.,
Digitally signed by S.K.P. Dilip Babu, M.A., M.L.,
Date: 2025.01.29 17:34:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,

கும்முடிப்பூண்டி.